## திருவள்ளூர் அருகே அமோனியா வாயு கசிவு விபத்து:

# உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு தலா ரூ.10 லட்சம் வழங்குக!

## சட்டப்பேரவையில் தி.மு.க. கோரிக்கை!

**சென்னை, ஜூன் 23 -**

**திருவள்ளூர் அருகே அமோனியா வாயு கசிவு விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு தலா பத்து லட்சம் ரூபாய் நிதி வழங்க வேண்டுமென்று சட்டப்பேரவையில் கழகக் கொறடா எ.வ.வேலு வலியுறுத்தினார்.**

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அடுத்த கன்னிகைப்பேர் கிராமத்தில் இயங்கி வந்த தனியார் கடல் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையில் எதிர்பாராத விதமாக அம்மோனியா நச்சு வாயு கசிந்தது. இந்த விபத்தில் 70க்கும் அதிகமானோர் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதில் இரண்டு பேர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்த நிலையில், மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 11 பேரில் இளம் பெண் ஒருவர் நேற்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேபோல் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 11 பேரில் இளம் பெண் ஒருவரும் நேற்று காலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மேலும், பெரிய பாளையம் அருகே உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 2 பேர் இன்று காலை உயிரிழந்தனர். இதனையடுத்து அம்மோனியா வாயு கசிவு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது.

உயிரிழந்தவர்கள் அனைவரும் ஒடிசா, அசாம், ஜார்க்கண்ட் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இதனிடையே, அம்மோனியா வாயு கசிவு ஏற்பட்ட ஆலையின் மேலாளர் மற்றும் மேற்பார்வையாளர் உள்ளிட்ட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆலையின் பாதுகாப்பு விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்பட்டதா மற்றும் அம்மோனியா வாயு குழாய்களில் ஏற்பட்ட பழுது குறித்தும் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**சட்டப்பேரவையில் நேரலை நிறுத்தம்! கூச்சல் குழப்பம்!**

திருவள்ளூர் அருகே நிகழ்ந்த அமோனியா கசிவு விவகாரத்தை சட்டப்பேரவையில் பேச எதிர்க்கட்சிகளுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது நேரலை நிறுத்தப்பட்டதால், கூச்சல், குழப்பம் நிலவியது.

தமிழ்நாடு சட்டப்பேரவை கூடியதும் அமோனியா கசிவு விவகாரத்தை தி.மு.க., உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எழுப்பின. ஆனால் இந்த விவகாரம் குறித்து பேச சபாநாயகர் அனுமதி மறுத்து விட்டார். அமோனியா கசிவு விவகாரம் குறித்து 110 வது விதியின் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பர்வேஸ் அறிக்கை வாசித்தார்.

அமோனியா கசிவால் பாதிக்கப்பட்ட 74 பேர் மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். 110 வது விதியின் கீழ் அமைச்சர் படித்த அறிக்கையில் முக்கிய அறிவிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை. இந்த விவகாரம் குறித்து பேச எதிர்க்கட்சிகளுக்கு சபாநாயகர் வாய்ப்பு தரவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது சட்டப்பேரவையில் நேரலை நிறுத்தப் பட்டதால், கூச்சல், குழப்பம் நிலவியது.

இந்நிலையில் திருவள்ளூர் அருகே நிகழ்ந்த அமோனியா கசிவு விவகாரத்தை சட்டப்பேரவையில் பேசிய திமுக கொறடா எ.வ.வேலு, அமோனியா கசிவால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

# பெரியபாளையம் அருகே தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிவு!

## 8 பேர் பலி: 35 க்கும் மேற்பட்டோர் கவலைக்கிடம்!

திருவள்ளூர், ஜூன் 23-

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அருகே உள்ள கன்னிகைப்பேர் கிராமத்தில் செயின்ட் பீட்டர் பால் என்ற பெயரில் இறால் மற்றும் கடல் உணவு பொருட்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தனியார் நிறுவனம் செயல்பட்டு வந்தது.

இந்த நிறுவனத்தை சென்னையை சேர்ந்த ஜோசப் ஜெகன்,மோகன் ஆகிய இருவரும் நடத்தி வந்தனர்.டேனியல் என்பவர் மேலாளராக பணியாற்றி வருகிறார். தொழிற்சாலையில் தினமும் 2 ஷிப்ட் மூலம் 200 க்கும் மேற்பட்ட வட மாநில தொழிலாளர்கள் இங்கு தங்கி பணியாற்றினர்.இதில் பெரும்பாலானோர் பெண்கள் ஆவர்.சுமார் 120 பேர் பணியில் இருந்த போது ‘தொழிற்சாலையில் இருந்து திடீரென அமோனியா வாயு கசிவு ஏற்பட்டது.





இதனை சுவாசித்த பணியில் இருந்த தொழிலாளர்கள் மயங்கி விழுந்தனர். அவர்களது வாய், மூக்கு. காதுகளில் இருந்து ரத்தம் வழிந்தது. அவர்களை உடனடியாக மீட்டு மஞ்சங்கரணையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரி மற்றும் செங்குன்றம், சுங்கச்சாவடி அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு சென்று அனுமதித்தனர்.

மொத்தம் 72 பேருக்கு மயக்கம் ஏற்பட்டு இருந்தது. உடல் நலம் மிகவும் மோசம் அடைந்தவர்கள் மேல் சிகிச்சைக்காக சென்னை ‘ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரி, ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதில் மஞ்சங்கரனையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஜுமானி ஜுவாங் (19). மாலோத்தி (20) ஆகிய 2 பேரும் இறந்தனர். மேலும் சிகிச்சை பெற்று வந்த ஒடிசா மாநிலத்தை சேர்ந்த சபினி (22) என்பவர் பலியானார்.

இதேபோல் சென்னை ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்த ஒடிசா மாநிலத்தை சேர்ந்த கீதா ஜுவாங்கா(24) மற்றும் ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்த ஒருவர் என மொத்தம் 8 பேர் அடுத்தடுத்து உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இதனால் அமோனியா வாயு கசிந்த விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 8 அதிகரித்து உள்ளது.

மேலும் 35 பேர்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. அவர்களுக்கு வென்டிலேட்டர் உதவியுடன் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் மொத்தம் 67 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

அவர்களது உடல் நிலையை டாக்டர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். சிகிச்சை பெற்று வரும் அனைத்து தொழிலாளர்களும் வடமாநிலத்தை சேர்ந்தவர்கள். அவர்களது விபரங்களை அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர். பலியாளவர்களின் உடல்களை அவர்களது சொந்த ஊருக்கு அனுப்ப நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

வாயு கசிவு ஏற்பட்ட நிறுவனத்தில் தங்கி பணியாற்றிய மேலும் 140 தொழிலாளர்களை அதிகாரிகள் மீட்டு பெரியபாளையத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்து உள்ளனர்.

### மாநகர காவல் ஆணையர்கள் உள்பட

## 14 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிடமாற்றம்!

*சென்னை, ஜூன்.23-*

*மாநகர காவல் ஆணையர்கள் உள்பட 14 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.*

*தமிழகத்தில் 14 ஐபிஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பான உத்தரவை தமிழக உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் கே. மணிவாசன் பிறப்பித்துள்ளார்.*

*மதுரை காவல் ஆணையராக எஸ். ராஜேந்திரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சென்னை வடக்கு மண்டல கூடுதல் ஆணையராக கபில் குமார் சாரக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*திருப்பூர் மாநகர காவல் ஆணையராக எஸ். ராஜேஸ்வரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு ஐஜியாக அனில் குமார் கிரி நியமிக்கப்பட்டுள்ளார்.*

*சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையராக தேன்மொழி நியமிக்கப்பட் டுள்ளார்.*

*லஞ்ச ஒழிப்புத் துறை சிறப்பு புலனாய்வு பிரிவு ஐஜியாக மகேஸ்வரி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*சென்னையில் காவல் துறை தலைமையகத்தின் ஏடிஜிபியாக ஆயுஷ் மணி திவாரி நியமிக்கப் பட்டுள்ளார்.*

## பாயிண்ட் வரட்டும்



‘டி சர்ட் போட்ட
கலைஞராக”
சொற்சிலம்பம்
ஆடிய உதயநிதி..

பதிலுரைக்கு
காத்திருக்கிறது தமிழ்நாடு

பாயிண்ட் வரட்டும்
பாயிண்ட்
வரட்டும் என

மண்டபத்து
குறிப்புக்கும்
மனப்பாடம்
செய்வதற்கும்
காத்திருக்கிறார்
கோட்டு சூட்டு
முதலமைச்சர்...

#என்னநாஞ்
#சொல்றது



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

# ‘நீட்’ எதிர்ப்பு: ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து - சென்னையில் கழக மாணவர் அணியினர் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!